National University of Singapore
Source: *Tamil Murasu*, p2
Date: 30 August 2020

முன்கள பணியாளர்களுக்கு ஊக்கமளிக்க கெண்ட் ரிட்ஜ் ரயில் நிலையத்தில் புது முயற்சி

# நன்றிகூறும் வாசகங்களுடன் காட்சியளிக்கும் சுவர்

பொதுப் போக்குவரத்து பயணங்களின்போது தாங்கள் நேரில் கண்ட ஊக்கம்தரும் செயல்கள் குறித்து புதிய இணையவாசல் ஒன்றில் பயணிகள் பதிவிட முடியும்.

அடுத்த மாதம் தொடங்கப்படவிருக்கும் அந்த இணையவாசல், ‘அக்கறைமிக்க எஸ்ஜி பயணிகள் குழு’ அறிமுகப்படுத்தவிருக்கும் புதிய முயற்சிகளின் ஒரு பகுதியாக அமைகிறது.

வட்டப் பாதையில் உள்ள கெண்ட் ரிட்ஜ் எம்ஆர்டி நிலையத்தில் மெய்நிகர் காணொளி மூலம் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இந்தப் புதிய முயற்சி குறித்து அறிவிக்கப்பட்டது.



கெண்ட் ரிட்ஜ் எம்ஆர்டி நிலையத்தில் நன்றிகூறும் வாசகங்களுடன் காட்சியளிக்கும் சுவரைப் பார்வையிடும் போக்குவரத்து அமைச்சர் ஓங் யி காங் (இடக்கோடி). **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

கொவிட்-19 நோய்ப் பரவலை எதிர்த்துப் போராடிவரும் முன்களப் பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வாசகங்களுடன் காட்சி அளிக்கும் சுவர் ஒன்றும் கெண்ட் ரிட்ஜ் எம்ஆர்டி நிலையத்தில் இடம்பெற்று உள்ளது.

‘அக்கறைமிக்க எஸ்ஜி பயணிகள் குழு’வுடன் பங்காளித்துவ முறையில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக மாணவர் சங்கம் இந்தச் சுவரைத் தயாரித்துள்ளது.

நேற்றைய மெய்நிகர் நிகழ்ச்சியில் பொதுப் போக்குவரத்து ஊழியர்கள், தேசிய பல்கலைக்கழக மருத்துவமனை ஊழியர்கள், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக மாணவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடன் போக்குவரத்து அமைச்சர் ஓங் யி காங்கும் பங்கேற்றார்.

‘அக்கறைமிக்க எஸ்ஜி பயணிகள் குழு’ வழங்கிய கைசுத்திகரிப்பான், உணவு, பானப் பற்றுச்சீட்டு, தின்பண்டங்கள் அடங்கிய பராமரிப்புப் பைகளைப் பொதுப் போக்குவரத்து ஊழியர்களும் மருத்துவமனை பணியாளர்களும் பெற்றுக்கொண்டனர்.

“நாம் வாழும் இந்தச் சிரமமான காலகட்டத்தில் நமது நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. வேலையும் வருமானமும் பாதிக்கப்பட்டுள்ளன. எனினும், நம்மைச் சுற்றியுள்ள சக சிங்கப்பூரர்கள், நமது குடும்பம் மற்றும் நண்பர்கள் ஆகியோரின் உதவியும் கருணையும் நம் அனைவருக்கும் பக்கபலமாக இருக்கும்,” என்று அமைச்சர் ஓங் குறிப்பிட்டார்.

இவ்வாண்டு ஜனவரியில் ‘அக்கறைமிக்க எஸ்ஜி பயணிகள் குழு’ அமைக்கப்பட்டது. உடற்குறை அல்லது மருத்துவப் பிரச்சினைகள் கொண்ட சிறப்புத் தேவைகளுடைய பயணிகள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த அடுத்த மாதம் காணொளி இயக்கம் ஒன்றை அக்குழு அறிமுகப்படுத்த இருக்கிறது.

உண்மையான வாழ்க்கை அனுபவங்களைச் சித்திரிக்கும் குறும்படத் தொடரை வெளியிடுவதன் மூலம் பொதுமக்களிடையே ஒருவர் மற்றொருவருக்குப் பரிவு காட்டும் உணர்வை ஏற்படுத்த அந்தக் குழு நோக்கம் கொண்டுள்ளது.

புதிதாக தொடங்கப்படவுள்ள இணையவாசலிலும் சமூக ஊடகங்களிலும் ஒவ்வொரு மாதமும் இந்தக் குறும்படத் தொடர் வெளியிடப்படும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.